2009 பிப்ரவரி 20] [பேரவைத் தலைவர்]

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மற்றும் சுயேச்சை உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் விதிகளுக்கு மாறாகச் செயல்பட்டு, பேரவை நடவடிக்கைகளை நடைபெறவிடாமல் குந்தகம் விளைவிப்பதால், அவர்கள் அனைவரையும் வெளியேற்ற உத்தரவிடுகிறேன்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்டு கட்சி, இந்தியக் கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மற்றும் சுயேச்சை உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)

முற்பகல் 10-20

4. கவன ஈர்ப்பு

வேலூர் மாவட்டம், தோரப்பாடி, அல்லாபுரம் பேரூராட்சிகள், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்மூலம் குடிநீர் வழங்கக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் என்ன படித்தார் என்றே தெரியவில்லை, எங்கள் காதில் விழவில்லை. எனவே மீண்டும் ஒரு முறை அதனைப் படிக்குமாறு அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களைப் பேச அழைத்தது எதற்கு என்று தெரியுமல்லவா?

திரு. சி. ஞானசேகரன்: ஒன்றுமே கேட்கவில்லை, அவர் மீண்டும் ஒரு முறை படித்துவிட்டால் நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தீர்கள். அதன்மீது மட்டும் அமைச்சரின் கவனத்தை ஈர்க்கவேண்டும்.

[2009 பிப்ரவரி 20

திரு. சி. ஞானசேகரன்: விதி 110-ன்கீழ் என்ன படித்தார் என்றே தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பைச் சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: இன்னொரு முறை அமைச்சரை வாசிக்கச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் உங்களுக்கு ஒரு copy-ஐக் கொடுப்பார். நீங்கள் கொடுத்த கவன ஈர்ப்பு அறிவிப்பை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், தொரப்பாடி, அல்லாபுரம் பேரூராட்சிகள் போன்ற பகுதிகளில் குறைவாகக் குடிநீர் வழங்கப்படுவதால், அதனைத் தவிர்ப்பதற்கு அப்பகுதியில் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இறுதி செய்யப்பட்டு, ஜப்பானியப் பன்னாட்டுக் கூட்டுறவு நிதியுதவியுடன் செயலாக்கம் மேற்கொள்ளும் நிலையிலுள்ளதனால், தற்போது வேலூர் மாவட்டம், தொரப்பாடி, அல்லாபுரம் பேரூராட்சிகளை இத்திட்டத்தில் சேர்க்க சாத்தியக்கூறுகள் இல்லை.

வேலூர் மாவட்டத்திலுள்ள தொரப்பாடி, அல்லாபுரம் பேரூராட்சிகளுக்குப் பாலாற்றை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் அமைக்க ரூ.380.00 இலட்சத்தில் திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதலளிக்கப்பட்டு, 10-2-2009 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. திட்டச் செயலாக்கப் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

2009 பிப்ரவரி 20] [திரு. மு.க. ஸ்டாலின்]

வேலூர் மாவட்டத்திலுள்ள வேலூர் மாநகராட்சி, 6 நகராட்சிகள் மற்றும் 5 பேரூராட்சிகளுக்கு மேட்டூர் (செக்கானூர்) அணை அருகில் காவிரியாற்றை நீராதாரமாகக் கொண்டு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்தேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் ஏற்கெனவே இறுதி செய்யப்பட்டு, ஜப்பான் நாட்டு நிதியுதவி ரூ.1,330 கோடியைப் பெற்று, அந்தத் திட்டம் அடிக்கல் நாட்டப்பெற்று, நிறைவேற்றப்படும் என்ற செய்தியைச் சொல்லி, இந்தத் திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்டத்திலுள்ள தொரப்பாடி மற்றும் அல்லாபுரம் ஆகிய பேரூராட்சிகளை இணைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்றும் தெரிவித்திருக்கின்றார்கள். நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதென்னவென்றால், எவ்வாறு தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இருக்கக்கூடிய மக்கள் குடிநீருக்காக அல்லல்படுகின்றார்களோ, அதேபோல எங்களுடைய மாவட்ட மக்களும் குடிநீருக்காகப் பெரிய அவதிக்குள்ளாகியிருக்கின்றார்கள். மேலும், எங்களுக்கு நீராதாரமாக இருந்த பாலாறும் கடந்த ஐந்தாண்டுகளாக நீர் இல்லாமல், வெள்ளம் வராமல், மிகவும் வற்றிப் போய், நிலத்தடி நீரும் 300 அடிக்குக் கீழே போய்விட்டது. ஆகவே, பாலாற்றை ஆதாரமாக வைத்துக்கொண்டு உருவாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்களெல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, அங்கே நீரை வழங்கக்கூடிய நிலை இல்லாத காரணத்தால், அல்லாபுரம் மற்றும் தொரப்பாடி பேரூராட்சிகளுக்கு 23 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

ஏற்கெனவே ஆறரைக் கோடி ரூபாய்க்கு ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அல்லாபுரம் மற்றும் தொரப்பாடி பேரூராட்சிகளுக்காகத் தயாரிக்கப்பட்டு, அதன்மூலம் மேல்மணவூர் என்ற இடத்திலிருந்து தண்ணீரைக் கொடுத்துக்கொண்டிருந்தோம். பாலாறு வற்றிவிட்ட காரணத்தால், pumpset on செய்தால், அந்தத் தண்ணீர் தொரப்பாடி பேரூராட்சிக்குக்கூட போய்ச் சேருவதேயில்லை. இடையிலே இருக்கின்ற மக்கள் சிலர் குடங்களிலே பிடித்துக்கொண்டு

போய்விடுவதால், தண்ணீர் போய்ச் சேருவதில்லை. ஆகவே, இப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கின்ற காரணத்தால், இரையாங்காடு என்கிற பகுதியிலே குடிநீர் வடிகால் வாரியத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு கிணற்றை உருவாக்கி, அந்தக் கிணற்றிலிருந்து மேல்மணவூருக்கு பம்ப் செய்து, மீண்டும் ஒரு முறை பம்ப் செய்துதான், தொரப்பாடி, அல்லாபுரம் பேரூராட்சிகளுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இப்படி இந்தத் திட்டத்தை உருவாக்கினாலுங்கூட, பாலாற்றை ஆதாரமாக வைத்து உருவாக்கப்படுகின்ற எந்தக் குடிநீர்த் திட்டமானாலும், நிச்சயமாக அது கூடிய விரைவிலே வற்றிப் போய்விடும். காரணம், அங்கே recharge ஆவதேயில்லை. அங்கே மழை இல்லை, கடந்த ஐந்தாண்டுகளாக வெள்ளம் வரவில்லை. எனவே, காவிரி ஆற்றுத் தண்ணீரை எங்களுடைய வேலூர் மாவட்டத்திற்குக் கொண்டு வந்தால்தான் எங்களுக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படும்.

முற்பகல் 10-25

இப்போது வேலூர் மாநகராட்சிக்கு, சத்துவாச்சாரி நகராட்சிக்குக் கொடுக்கப்படுகின்ற பொன்னையாற்றுத் திட்டம்கூட இன்னும் மூன்று ஆண்டுகளுக்குத்தான் வரும். அதற்கு மேல் தண்ணீர் வராது. குடிப்பதற்கே தண்ணீர் இல்லாமல் இன்று எங்களுடைய தொரப்பாடி, அதேபோல அல்லாபுரம் பேரூராட்சி, பக்கத்தில் இருக்கக்கூடிய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்களுடைய தொகுதியில் எடுத்துக்கொண்டாலும்கூட காந்தி நகர், கழிஞ்சூர், பழைய காட்பாடி போன்ற பகுதிகளில் எல்லாம் குடிநீர் இல்லாமல் தற்போது மக்கள் பெருத்த அவதிக்குள்ளாகிக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுதே நீங்கள் ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களோடு இணைத்துச் செய்தீர்களென்று சொன்னால், ஒரு 500, 600 கோடி ரூபாய் மீதப்படுத்தி அந்தத் திட்டத்தை இப்போது எடுக்கலாம்.

அதற்கு ஜப்பான் நிதியுதவி கிடைக்காவிட்டாலுங்கூட, நீங்கள் உலக வங்கியிடமோ அல்லது நபார்டுமூலமோ பணத்தைப் பெற்று இந்தத் திட்டத்தை இப்போதே உருவாக்கினால்தான் இன்னும் மூன்று ஆண்டுகளில் நாங்கள் காவிரியாற்று நீரைப் பார்க்கமுடியும். ஆகவே, ஒகேனக்கல்லிலிருந்து தண்ணீர் எடுப்பது உங்களுக்குப் பிரச்சினையாக இருந்தாலுங்கூட, மேட்டூர் பகுதியிலே செக்கானூர் என்ற இடத்திலிருந்து அந்தத் திட்டத்தை உருவாக்கி--ஏற்கெனவே ஆய்வு

2009 பிப்ரவரி 20] [திரு. சி. ஞானசேகரன்]

செய்துள்ளதாகச் சொன்னீர்கள்--அந்த ஆய்வு எந்த நிலையில் இருக்கிறது? ஒரு வேளை அந்த ஆய்வு--930 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதாகக்கூட ஒரு முறை இந்த அவையிலே சொல்லப்பட்டது. ஆகவே, நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் தெரிந்துகொள்ள விரும்புவதெல்லாம், ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் இல்லாவிட்டாலும்கூட, மேட்டூர் அணையிலிருந்து, செக்கானூர் என்ற பகுதியிலேயிருந்து நீங்கள் தண்ணீரைக் கொண்டு வந்து எங்களுடைய மாவட்டம் முழுவதற்கும்--ஏனென்றால், பாலாறு இப்போது வற்றிவிட்ட நிலையில், இது ஒன்றுதான் எங்களுக்குக் கொஞ்சம் நம்பிக்கை கொடுத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, வற்றாத ஜீவ நதியாக இருக்கக்கூடிய காவிரி ஆற்றிலிருந்து தண்ணீரை வேலூர் மாவட்டத்திற்கு, குறிப்பாக, தொரப்பாடி, அல்லாபுரம் பேரூராட்சிகளுக்கும், பக்கத்தில் இருக்கக்கூடிய காட்பாடி, கழிஞ்சூர் மற்றும் இருக்கக்கூடிய தாரபடவேடு போன்ற பகுதிகளுக்கும் வழங்குவதற்கு நீங்கள் ஆவன செய்வீர்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலுள்ள வேலூர் மாநகராட்சி, 6 நகராட்சிகள்; அதாவது, திருப்பத்தூர், ஜோலார்பேட்டை, வாணியம்பாடி, ஆம்பூர், குடியாத்தம், பேரணாம்பட்டு; அதைத் தொடர்ந்து 5 பேரூராட்சிகள் நாட்றாம்பள்ளி, உதயேந்திரம், ஆலங்காயம், ஒடுக்கத்தூர், பள்ளிகொண்டா மற்றும் 64 வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்கு மேட்டூர் அணையின் கீழ்ப்புறம் செக்கானூர் தடுப்பணையின் மேல்புறம் தொட்டில்பட்டி கிராமம் அருகில் காவிரியாற்றை நீராதாரமாகக்கொண்டு, ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தினுடைய உத்தேச மதிப்பீடு ரூபாய் 1,400 கோடியாகும். திட்ட மதிப்பீடு மார்ச் 2009 இறுதியிலே உறுதி செய்யப்படவிருக்கிறது. நிதியாதாரம் இறுதி செய்யப்பட்டவுடன் திட்டப் பணிகள் தொடங்க நிச்சயமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், ஏற்கெனவே வாணியம்பாடி, ஆம்பூர், ஆலங்காயம், ஜோலார்பேட்டையையெல்லாம் இணைத்திருக்கிறீர்கள். இருந்தாலும்கூட, எதிர்காலத்தில் காட்பாடி, தாரபடவேடு, அதேபோல, கழிஞ்சூர், காந்தி நகர் போன்ற பேரூராட்சிகளும், மேல்விஷாரம், இன்னும் சொல்லப்போனால், ஆற்காடு, ராணிப்பேட்டை ஆகிய இடங்களிலும் அந்த மாதிரி வந்துவிடும். ஆகவே, நீங்கள் புதிதாகச் சேர்க்கப்படவிருக்கின்ற அந்தத் திட்டத்தில் எங்கள் வேலூர் மாவட்டம் முழுமையும்--ஏனென்றால் கலவை பேரூராட்சி அந்தப் பக்கம் போய்விடுகிறது. கலவை போன்ற பகுதிகளையெல்லாம் ஒருங்கிணைத்து வேலூர் மாவட்டம் முழுமைக்கும்--இணைத்து ஒரு திட்டத்தை உருவாக்கி உடனடியாகக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படுமா? இதற்கு நபார்டோ, உலக வங்கியினுடைய பணத்தையோ பெற்று இப்போதே தருமபுரி, கிருஷ்ணகிரி திட்டத்தில் சேர்த்துச் செய்தீர்கள் என்று சொன்னால், 600 கோடி ரூபாய் உங்களுக்கு மீதப்படுத்தப்படும். ஆகவே, இப்பொழுதே நீங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதோடு, அதைச் செயல்பாட்டிற்கும் உடனடியாக உத்தரவிட்டு, அதை இணைத்துச் செயல்படுத்தினால் நிச்சயமாக எங்களுடைய மாவட்டம் எதிர்காலத்தில் குடிநீர்ப் பிரச்சினையிலிருந்து தப்பிக்கும். இல்லையென்று சொன்னால், குடிநீர்ப் பிரச்சினையிலே நிச்சயமாக சிக்கி செத்துப் போகும் நிலை வரும். ஆகவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து இப்பொழுதே ஆணையிட்டு--இந்தத் திட்டம் எப்போது தொடங்கும், அதாவது அறிக்கை வந்த பிறகு எப்போது தொடங்கப்படும்? நபார்டு அல்லது உலக வங்கி உதவியைப் பெற்றாவது இணைத்துச் செயல்படுத்திட நீங்கள் ஆவன செய்வீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாநகராட்சியில் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கூறக்கூடிய தொரப்பாடி மற்றும் அல்லாபுரம் பேரூராட்சிகளும் இணைக்கப்பட்டுள்ள நிலையில் இப்பகுதிகளுக்குக் கூடுதல் குடிநீர் வழங்கப்படவேண்டியிருக்கிறது. புதிய வேலூர் மாநகராட்சியில் வேலூர், சத்துவாச்சாரி, தாரபடவேடு, மேல்விஷாரம், ஆற்காடு, ராணிப்பேட்டை, வாலாஜா ஆகிய 7 நகராட்சிகளும்,

2009 பிப்ரவரி 20] [திரு. மு.க. ஸ்டாலின்]

அல்லாபுரம், தொரப்பாடி, செம்பாக்கம், கழிஞ்சூர், காந்தி நகர், காட்பாடி ஆகிய பேரூராட்சிகளும், 64 ஊரகக் குடியிருப்புகளும் இணைக்கப்படுகின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, அந்த வகையில், நிச்சயமாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் எடுத்து வைத்த அந்தக் கோரிக்கையும் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

5. வரவு–செலவுத் திட்டம், 2009–2010, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2009-2010 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2010 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், அனுமதி அளித்த எங்களுடைய தலைவர் ஐயா திரு. சுதர்சனம் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி) தலைமை]

இந்த நிதிநிலை அறிக்கைமீதான என்னுடைய கருத்துகளை காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பதிவு செய்ய விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையிலே முக்கியமாக நான் சொல்ல வேண்டுமென்று நினைப்பது, தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த, விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவன் என்ற முறையிலே, கிட்டத்தட்ட 80 சதவிகித மக்கள் விவசாயத்தைச் சார்ந்திருக்கக்கூடிய எங்களது மாவட்டத்திலே விவசாயிகள் நலிந்துவிடக்கூடாது என்பதற்காக, இந்த அரசைப் பொறுத்தவரையில் கடனை வாங்கி, சரியான முறையிலே கட்டுபவர்களுக்கு வட்டி தள்ளுபடி செய்யப்படும் என்ற திட்டத்தை, அந்த அறிவிப்பை நான் வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், எங்கள் பகுதியைப் பொறுத்தவரையிலே நெல், தென்னை, கரும்பு--கரும்பு என்பது தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இப்போதுதான் நாங்கள் பயிரிட ஆரம்பித்திருக்கிறோம். நெல்லைப் பொறுத்தவரையிலே அதிக